வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 10.03.2026 செவ்வாய்க்கிழமை இதழ் : 64 பக்கங்கள் : 08

## நயினாதீவு அம்மன் ஆலய பிராமணர் நேற்று கத்தியால் குத்திப் படுகொலை!

### மற்றொரு ஆலயத்தின் குருக்கள் கைவரிசை

யாழ்ப்பாணம், மார்ச் 10

நயினாதீவு ஆலயமொன்றில் பணியாற்றும் பிரதம குருக்கள் ஒருவர் நயினாதீவு அம்மன் ஆலயத்தில் பணியாற்றும் பிராமணர் ஒருவரைக் கத்தியால் குத்திப் படுகொலை செய்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை நயினாதீவுப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

நயினாதீவுப் பகுதியில் உள்ள ஆலமொன்றின் பிரதம குருவாகப் பணியாற்றிக் கொண்டிருக்கும் குருக்கள் ஒருவரின் கத்திக்குத்துக்கு இலக்காகி, நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலயத்தில் பணி யாற்றி வந்த பிராமணரான நாவலப் பிட்டியைச் சேர்ந்த 40 வயதான கிருஷ்ண குமார் என்ற பிராமணரே கொல்லப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.


பணி நிமித்தம் நயினாதீவுக்குச் சென்று, அங்குள்ள ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலயத்துக்குப் பின்னால் உள்ள வீடொன்றில் தங்கியிருந்து நாகபூசணி அம்பாள் ஆலயத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கும் பிராமணர் ஒருவர் குறித்த வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த சமயம், அங்கு சென்ற வேறொரு ஆலயத்தின் பிரதம குரு தான் கொண்டு வந்த கத்தியால் பிராமணரைக் குத்திக் கொலை செய்தார் என தெரிவிக்கப்படுகிறது.

கொல்லப்பட்டவரும், கொலை செய்தார் எனச் சந்தேகிக்கப்படுபவரும் நயினாதீவுக்குத் தொழில் நிமித்தம் சென்று அங்கு தங்கி இருந்தவர்கள் என்றும், இருவருக்கும் இடையிலான முன்பகையே சம்பவத்துக்குக் காரணமாக இருக்கலாம் என்று கூறப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறை பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(அ-ஒ)

## ஈரானிய கப்பலின் இறுதி நிமிடங்கள் வெளியான தொலைபேசி உரையாடல்



கொழும்பு, மார்ச் 10

இலங்கைக்கு அப்பாலான கடற்பகுதியில் மூழ்கடிக்கப்பட்ட ஈரானிய கப்பலின் இறுதி நிமிடங்களில் நிகழ்ந்த வாக்குவாதம் மற்றும் எச்சரிக்கைகள் குறித்து தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கையின் காலி துறைமுகத்திலிருந்து சுமார் 19 கடல்மைல் தொலைவில் உள்ள இந்தியப் பெருங் கடல் பகுதியில், அண்மையில் ஈரானிய கடற்ப டைக்குச் சொந்தமான "ஐரிஸ் டேனா" எனும்

07

## சவால்களை எதிர்கொள்வதற்கு வலுவான நிலையில் இலங்கை!

### மத்திய வங்கி ஆளுநர் தகவல்



கொழும்பு, மார்ச் 10

மத்திய கிழக்கில் நிலவும் போர்ச் சூழலால் உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை அதிகரித்த போதிலும், அதனால் ஏற்படும் பணவீக்கத் தாக்கத்தை எதிர் கொள்ளும் வலுவான நிலையில் இலங்கை இருப்பதாக மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

நேர்காணல் ஒன்றின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

எண்ணெய் இறக்குமதியை நம்பியிருக்கும் ஒரு நாடு என்ற ரீதியில், விலை உயர்வு இலங்கையின் பணவீக்கத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை

07

## அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விநியோகத்தில் பாதிப்பு ஏற்படக்கூடும்!

### தட்டுப்பாட்டைத் தவிர்க்க நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 10

மத்திய கிழக்கில் விரிவடைந்து வரும் போர்ச் சூழல் காரணமாக, இலங்கையின் எரிசக்தி மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விநியோகத்தில் பாதிப்புகள் ஏற்படக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போதைக்கு நேரடி அச்சுறுத்தல் இல்லாவிட்டாலும், வரும் மாதங்களில் விலை அதிகரிப்பு மற்றும் விநியோகத் தடைகளை எதிர்கொள்ள அரசாங்கம் தயாராகி வருகிறது.

உலகளாவிய எண்ணெய் நுகர்வில் 20 வீதத்தைக் கையாளும் முக்கிய கடல் வழியான ஹோர்முஸ் நீரிணை ஊடான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

போர் பாதுகாப்புக்கான கடல்சார் காப்பீட்டு பிரீமியங்கள் அதிகரித்து வருகின்றன - சில சந்தர்ப்பங்களில் 1,000 சதவீதத்திற்கும் அதிகமாக - இந்த முக்கியமான கடல்சார் பாதை வழியாக எரிசக்தியை நகர்த்துவதற்கான செலவை வியத்தகு முறையில் அதிகரிக்கின்றன என்று ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

சரக்கு கட்டணங்கள் அதிகரிப்பு மற்றும் ரூபாயின்

07

## சஜின் வாஸ் கைது!



கொழும்பு, மார்ச் 10

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்தன, சட்டவிரோத சொத்துக்களைச் சேர்த்தார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் நேற்று இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

சட்டவிரோத

07

### அதிகரிக்கும் வெப்பநிலை;

## சிறுவர்களுக்கு தோல் பிரச்னைகள் நீர்ச்சத்து இழப்பு ஏற்படும் அபாயம்!

கொழும்பு, மார்ச் 10


நாட்டில் அதிகரித்து வரும் வெப்பநிலையினால் சிறுவர்களிடையே தோல் தொடர்பான பிரச்னைகள் மற்றும் உடலில் நீர்ச்சத்து இழப்பு அதிகரிக்கும் அபாயம் உள்ளதாக சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அதிக வெப்பநிலை காரணமாக தோல் வெடிப்புகள், எரிச்சல், பூஞ்சை தொற்று போன்ற

07

## இந்தியாவுக்கு தங்கம் கடத்திய இருவர் மாதகல் கடலில் கைது!

### 6 கிலோ தங்கக் கட்டிகள் மீட்பு



யாழ்ப்பாணம், மார்ச் 10

யாழ்ப்பாணத்தில் இருந்து இந்தியாவுக்கு தங்கம் கடத்திய இருவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

07

## மின்சாரசபை தொழிற்சங்கங்கள் நேற்று முதல் திடீர் புறக்கணிப்பு!

கொழும்பு, மார்ச் 10

இலங்கை மின்சார சபையின் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை அடுத்து, சுமார் 25 தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து நேற்று பிற்பகல் 3 மணி முதல் பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளன.

மின்சார சபையை புதிய நிறுவனங்களாக மாற்றும் செயல்முறையின்போது, ஊழியர்களுக்கு முறையான நியமனக் கடிதங்கள் வழங்கப்படாமை இந்தப் போராட்டத்திற்கான பிரதான காரணமாக முன் வைக்கப்பட்டுள்ளது.

07

## காலநிலை மாற்றத்தினால் இலங்கைக்கு பெரும் ஆபத்து

கொழும்பு, மார்ச் 10

இலங்கையை அண்மையில் தாக்கிய "டித்வா" சூறாவளியானது, காலநிலை மாற்றத்தினால் நாடு எதிர்கொள்ளும் பேரிடர் அபாயங்களின் ஒரு வெளிப்பாடே என கிரீன்பீஸ் தெற்காசியாவின் புதிய அறிக்கை எச்சரித்துள்ளது.

காலநிலை மாற்றத்துடன் தொடர்புடைய தீவிர வானிலை நிகழ்வுகள் நாட்டின் பேரழிவு அபாயங்களை எவ்வாறு அதிகளவில் வடிவமைக்கின்றன

07

## நிலக்கரி ஊழலை மறைப்பதற்கு மத்திய கிழக்கு போர் ஒரு சாட்டு!

### ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 10

நிலக்கரி கொள்வனவில் இடம்பெற்ற ஊழல் மோசடிகளால் நாட்டுக்கு ஏற்பட்டுள்ள நஷ்டத்தை ஈடுசெய்ய, மின்சாரக் கட்டணத்தை உயர்த்த அரசாங்கம் முயற்சித்து வருவதாகவும், இதனை மறைப்பதற்காக மத்திய கிழக்கு போர்ச் சூழலையும் மசகு எண்ணெய் விலை உயர்வையும் அரசாங்கம்

07

## நாயாறில் சிறுமி துஷ்பிரயோகம் குற்றவாளிக்கு 10 வருட கடூழியம்

முல்லைத்தீவு, மார்ச் 10

முல்லைத்தீவு நாயாறு பகுதியில், கடந்த 2015 ஆம் ஆண்டு, பன்னிரெண்டு வயதுச் சிறுமி ஒருவரை துஷ்பிரயோகம் செய்த குற்றவாளிக்கு, கிளிநொச்சி மேல் நீதிமன்றத்தினால், பத்து வருட கடூழியச் சிறைத் தண்டனை வழங்கி தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு பொலிஸார், சந்தேக நபரை, முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தியிருந்தனர்.

07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைகள் புனிதமானவை, கருத்துக்கள் சுதந்திரமானவை

# வடக்கு-கிழக்கில் பொது நிறுவனங்களை வன எல்லைகளிலிருந்து நீக்க தீர்மானம்!

## காணிப் பிரச்னைகளுக்கு தீர்வு காணும் நோக்கில்

கொழும்பு, மார்ச் 10

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வனப்பகுதிகள் மற்றும் வனவிலங்கு சரணாலயங்களுக்குள் அமைந்துள்ள பாடசாலைகள், வைத்தியசாலைகள் உள்ளிட்ட பொது நிறுவனங்களை வன எல்லைகளிலிருந்து நீக்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பல தசாப்தங்களாக நிலவி வரும் காணிப் பிரச்னைகளுக்குத் தீர்வு காணும் நோக்கில், அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகப் சுற்றாடல் பிரதி அமைச்சர் அன்டன் ஜெயக்கொடி தெரிவித்துள்ளார்.

காணி எல்லைகள் முறையாக அடையாளப்படுத்தப்படாத காரணத்தினால், சில அரச அலுவலகங்கள் மற்றும் நீண்ட காலக் குடியிருப்புகள் வன ஒதுக்கீட்டு எல்லைகளுக்குள் உள்வாங்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இதனைச் சரிசெய்யும் வகையில், வனப்பாதுகாப்பு மற்றும் வனவிலங்கு திணைக்களங்கள் இணைந்து முன்னெடுக்கும் எல்லை நிர்ணயப் பணிகள் தற்போது இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளன.

இந்த நடவடிக்கையினால் காடுகளின் அடர்த்திக்கு பாதிப்பு ஏற்படாதெனவும், அதற்குப் பதிலாக "வனஸ்பதி" திட்டத்தின் கீழ் புதிய பகுதிகள் வன ஒதுக்கீடுகளாகப் பிரகடனப்படுத்தப்படும் எனவும் அமைச்சர் மேலும் உறுதிபடத் தெரிவித்துள்ளார். (அ)

# மன்னாரில் சிலம்பம் பயிற்சி ஆரம்பம்



மன்னார், மார்ச் 10

தமிழர்களின் பாரம்பரிய கலையான சிலம்பம் பயிற்சி நேற்று முன் தினம் ஞாயிற்றுக் கிழமை மன்னாரில் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஆசிரியர் மெல்சின் தலைமையில் தமிழர்களின் பாரம்பரிய கலையான சிலம்பம் கலை விழா ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கடந்த 35 ஆண்டுகளாக சிலம்பம் மற்றும் பல பாரம்பரிய கலைகளில் அனுபவம் பெற்றவரான பிரபல ஆசான் சூசைநாதர் யசோதரன் வி.எம்.சி.ரி. கலை மன்றத்தின் இயக்குநர் பொறியியலாளர் சூசைப்பிள்ளை விமலேஸ்வரன் நெறிப்படுத்தலில் நேற்று முன் தினம் இது ஆரம்பிக்கப்பட்டது.

இந்த ஆரம்ப விழாவில் மாணவர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டதுடன் சிலம்பப் பயிற்சிகள் தலைமை ஆசிரியர் அன்ரன் பெசன்பேர்க் மெல்சின் தலைமையில் சனிக் கிழமைகளில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மத்திய கிழக்கு தாக்குதல்களில் நான்கு இலங்கையர்கள் காயம்!

கொழும்பு, மார்ச் 10

மத்திய கிழக்கில் அண்மையில் இடம்பெற்ற தாக்குதல்களில் காயமடைந்த நான்கு இலங்கையர்களும் வைத்தியசாலையிலிருந்து சிகிச்சை பெற்றுத் திரும்பியுள்ளதாக வெளிவிவகார பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாகப் பிரதி அமைச்சர் விடுத்துள்ள அறிக்கையில்-

காயமடைந்த நான்கு இலங்கையர்களில் மூவருடன் நான் தொலைபேசி வாயிலாக உரையாடினேன். அவர்கள் தற்போது பாதுகாப்பாக இருப்பதை உறுதிப்படுத்தியுள்ளனர் அத்தோடு அவர்கள் சிகிச்சைகளின் பின்னர் நலமடைந்து வருகின்றனர்.

நான்காவது நபரைத் தொலைபேசி ஊடாகத் தொடர்பு கொள்ள முடியாதபோதிலும், அவரும் பாதுகாப்பாக வைத்தியசாலையிலிருந்து வெளியேறியுள்ளார்.

வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்விற்கு அரசாங்கம் முன்னுரிமை அளிக்கிறது. அந்தந்தப் பிராந்தியங்களில் உள்ள இலங்கையின் தூதரகங்கள் ஊடாக நிலைமைகள் மிக நெருக்கமாகக் கண்காணிக்கப்பட்டு வருகிறது-என்று குறிப்பிட்டுள்ளார். (அ)

# கைதுப்பாக்கியுடன் ஒருவர் கைது!

கொழும்பு, மார்ச் 10

கடுவலை பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைத்துப்பாக்கியுடன் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடுவலை பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் குழுவினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இந்த நபர் கைது செய்யப்பட்டார்.

கடுவலை, வெலிவிட்ட பகுதியைச் சேர்ந்த 47 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவரிடமிருந்து வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட ரிவோல்வர் துப்பாக்கி கைப்பற்றப்பட்டுள்ளது. (அ)

# ஈ.பி.டி.பி.யின் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மார்ச் 10

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாநகர வட்டாரக் கட்டமைப்பின் வலுவாக்கல் குறித்து அக்கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடல் நேற்று முன் தினம் மாலை கட்சியின் யாழ் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது.

யாழ். மாநகர சபையை உள்ளடக்கிய வட்டாரங்களின் நிர்வாக கட்டமைப்பினர், செயல்பாட்டாளர்கள், முக்கியஸ்தர்களுடன் நடைபெற்ற குறித்த கலந்துரையாடலின்போது செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, வட்டார கட்டமைப்பின் சமகாலச் செயற்பாடுகள் மற்றும் வலுவாக்கலின் அவசியம் குறித்து வலியுறுத்தியதுடன் அதற்கான ஆலோசனைகளையும் இதன்போது வழங்கினார். (அ)

# நீர்வேலியில் சுக்கிரவார சிறப்பு சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மார்ச். 10

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி கோவில் நடத்தும் வாராந்தச் சுக்கிரவாரக் கந்தபுராண படனத் தொடர் 47 ஆவது சொற்பொழிவு கோவில் சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 05. 30 மணிக்கு சமய ஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது. கோவிலின் பிரதம குருக்கள் ஸ்கந்தகுரு ஞானபானு, சிவசிறீ இராஜேந்திர சுவாமிநாதக்குருக்களின் ஆசியுரையை தொடர்ந்து தலைமையுரையை பரிபாலன சபைத் தலைவர் சி. தயாநாதனும், சிறப்புச்சொற்பொழிவை சைவப்புலவர் பொன். சந்திரவேல் "அகத்தியப் படலம்" என்னும் விடயப்பொருளில் நிகழ்த்துவார். சொற்பொழிவில் இருந்துநீர்வைக் கந்தன் புராண இதிகாசப் பாடசாலைமாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (அ)

# தேவரையாளி இந்து கல்லூரி இல்ல விளையாட்டு போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 10

கரவெட்டி தேவரையாளி இந்து கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டு போட்டி எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

கல்லூரி அதிபர் சதானந்தன் செல்வானந்தன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில், பிரதம அதிதிகளாக கலாமணி முரளீதரன் (பழைய மாணவர், பொறியியலாளர்), திருமதி லக்சனா முரளீதரன் (யாழ். மெதடிஸ்ட் பெண்கள் கல்லூரி -ஆசிரியர்) ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ)

# ரணிலின் பிரிட்டன் பயணம் சி.ஐ.டி. உறுதி செய்யவில்லை

கொழும்பு, மார்ச் 10

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பிரிட்டன் விஜயத்திற்காக வொல்வர்ஹாம்டன் பல்கலைக்கழகம் விடுத்த அழைப்பிதழ், உத்தியோகபூர்வமானதா என்பது குறித்து குற்றப் புலனாய்வுத் திணைக்களம் இன்னும் உறுதிப்படுத்தவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

2023 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் வொல்வர்ஹாம்டன் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் மைத்திரி விக்ரமசிங்கவுக்கு கௌரவ பேராசிரியர் பதவி வழங்கப்பட்ட நிகழ்வில் கலந்து கொள்வதற்காக, 16.6 மில்லியன் ரூபாய் பொதுப்பணம் முறைகேடாகப் பயன்படுத்தப் பட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டு தொடர்பிலேயே இந்த விசாரணை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த விஜயம் தனிப்பட்ட ரீதியிலானது என புலனாய்வுத் திணைக்களம் தெரிவிக்கும் அதே வேளை, பல்கலைக்கழகத்தின் முறையான அழைப்பின் பேரிலேயே இந்த விஜயம் அமைந்ததாக ரணில் தரப்பு வாதிடுகின்றது.

இந்த அழைப்பிதழின் உண்மைத்தன்மை குறித்து சமூக வலைத்தளங்களில் பல்வேறு தகவல்கள் பரவி வரும் நிலையில், அது குறித்த விசாரணைகள் இன்னும் நிறைவடையவில்லை என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ஏ.எஸ்.பி வூட்லர் தெளிவுபடுத்தியுள்ளார். (அ)

# பிரதமர் ஹரிணி அமரசூரிய பிலிப்பைன்ஸ் பயணமானார்



கொழும்பு, மார்ச் 10

ஆசிய அபிவிருத்தி வங்கியின் விசேட அழைப்பின் பேரில், சர்வதேச மகளிர் தின நிகழ்வுகளில் பங்கேற்பதற்காகப் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய நேற்று முன்தினம் நள்ளிரவு பிலிப்பைன்ஸின் மணிலா நகருக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு புறப்பட்டு சென்றார்.

மணிலாவிலுள்ள நினோய் அக்வினோ சர்வதேச விமான நிலையத்தை சென்றடைந்த பிரதமரை, பிலிப்பைன்ஸிற்கான இலங்கைத் தூதுவர் கலாநிதி சானக்க தல்பஹேவா, பிலிப்பைன்ஸ் அரசாங்கத்தின் உயர் மட்ட அதிகாரிகள் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகள் ஆகியோர் இணைந்து வரவேற்றனர்.

இந்த விஜயத்தின் முக்கிய அங்கமாக, மணிலாவிலுள்ள ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைமையகத்தில் நடைபெறவுள்ள சர்வதேச மகளிர் தின விழாவில் பிரதமர் விசேட உரை நிகழ்த்தவுள்ளார். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
10.03.2026 செவ்வாய்க்கிழமை
விசுவாவசு வருடம், மாசி 25

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# ஈரான் போரும் இலங்கையின் பொருளாதாரமும்

மத்திய கிழக்குப் போரின் விளைவாக உலகம் முழுவதும் குழப்ப நிலைக்கு உள்ளாகியிருக்கிறது. அமெரிக்க - இஸ்ரேல் கூட்டணிக்கும் ஈரானுக்கும் இடையிலான பதற்ற நிலையாக ஆரம்பித்த நெருக்கடி பரந்தளவிலான போராக மாறி, உறுதிப்பாட்டுடன் இருந்த நாடுகளையும் நகரங்களையும் நிச்சயமற்ற நிலைக்குள் தள்ளியிருக்கிறது.

பாதுகாப்பு குறித்த உணர்வைப் போர் தகர்த்துவிட்டது. வர்த்தக மார்க்கங்கள் குழம்பிப் போயிருக்கின்றன. எண்ணெய்ச் சந்தை ஆட்டங்கண்டிருக்கிறது பல தசாப்தங்களாக வளம் கொழித்து வளர்ச்சி கண்ட ஒரு பிராந்தியம் உறுதிப்பாட்டை இழந்து நிற்கிறது.

உலகின் பிரதிபலிப்பு கலப்பானதாக இருக்கிறது. மத்திய கிழக்குப் போரில் ஒரு பக்கத்தை எடுக்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட நாடுகள் உலகு தழுவிய பெரியளவிலான மோதல்களைத் தவிர்ப்பதற்காக தலையிடாமல் இருக்கின்றன. உள்நாட்டிலும் வெளியுலகிலும் அரசியல் அனுகூலங்களை அடைவதற்காக போரைக் கண்டிக்கின்ற நாடுகளும் இருக்கின்றன. அதேவேளை, சில அரசாங்கங்கள் பொருளாதார விளைவுகளை மனதிற்கொண்டு மௌனமாக இருக்கின்றன.

இலங்கையைப் போன்று போர் நெருக்கடிக்குள் அகப்பட்டுவிடக்கூடாது என்பதில் கடுமையான கரிசனையுடன் செயற்பட்ட நாடுகளும் கூட தவிர்க்க முடியாத வகையில் போரிற்குள் மாட்டுப்பட வேண்டியிருக்கிறது. பொருளாதாரத்தின் மீதான போரின் தாக்கம் குறித்து தெளிவான மதிப்பீட்டைச் செய்ய முடியாத அளவுக்கு நிலைவரம் கொந்தளிப்பானதாக இருக்கிறது.

போர் எவ்வளவு காலத்துக்கு நீடிக்கும்? போரின் அதிர்ச்சிகளினால் எந்தளவுக்கு ஒவ்வொரு நாடும் பாதிக்கப்படக்கூடிய நிலையில் இருக்கின்றன? என்ற கேள்விகளுக்கு உலகம் முகங்கொடுக்க வேண்டியிருக்கிறது.

இத்தகைய இடரார்ந்த நிலைவரத்துக்கு மத்தியில் போர் மேலும் தீவிரமடையும் என்ற பயத்தில் மக்கள் அவசர அவசரமாக பொருட்களைக் கொள்வனவு செய்கிறார்கள். வசதியுடையவர்களினால் தாராளமாகப் பொருட்களை வாங்கிக் குவிக்கக்கூடியதாக இருக்கிறது. அதேவேளை, அன்றாட வாழ்க்கையை ஓட்டுவதற்கு அவலப்படுகின்ற பிரிவினர் என்ன செய்வது என்று தடுமாறிக் கொண்டிருக்கிறார்கள்.

எரிபொருள் தட்டுப்பாட்டை எதிர்பார்த்து முன்கூட்டியே முடிந்தளவுக்கு எரிபொருளை நிரப்புவதற்காக எரிபொருள் விற்பனை நிலையங்கள் முன்பாக வாகனங்கள் நீண்ட வரிசைகளில் நிற்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. மேலதிகமாக கொள்கலன்களிலும் எரிபொருட்களை வாங்கி வீடுகளில் சேமிப்பதில் பலரும் அக்கறை காட்டுகிறார்கள்.

இந்த நிலைவரம் நான்கு வருடங்களுக்கு முன்னர் இலங்கை அதன் வரலாற்றில் முன்னென்றும் சந்தித்திராத படுமோசமான பொருளாதார வீழ்ச்சி நாட்களை மனக்கண்முன் கொண்டு வருகிறது.

ஈரானுடனும் பரந்தளவில் வளைகுடா நாடுகளுடனும் எண்ணெய் இறக்குமதி, தேயிலை ஏற்றுமதி, வர்த்தகம், கப்பல் போக்குவரத்து, சுற்றுலாத்துறை மற்றும் வெளிநாடுகளில் வேலை செய்யும் தனது தொழிலாறர்கள் அனுப்பும் பணம் ஆகியவற்றின் ஊடாக ஆழமாகப் பிணைக்கப்பட்டிருக்கும் இலங்கை ஏற்கெனவே அனுபவித்த பொருளாதார நெருக்கடியில் இருந்து சர்வதேச நாணய நிதியத்தின் உதவியுடன் படிப்படியாக மீண்டுவரும் நிலையில் திரும்பவும் பெருமளவுக்கு பாதிக்கப்படக்கூடிய ஆபத்து இருக்கிறது.

எரிபொருள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் கையிருப்பு குறித்து அரசாங்கம் என்னதான் உத்தரவாதங்களைத் தெரிவித்தாலும், மக்கள் அவற்றைநம்பத் தயாராயில்லை என்பதே நடைமுறை யதார்த்தமாகும்.

# புத்திரிகைத்துறை உட்பட தொழில் முனைவுகளில் தனக்கென்று ஒரு மரபை விட்டுச் சென்ற எஸ்.பி. சாமி

## இன்று அவரது முதலாவது நினைவு தினம்



தினக்குரல் தாபகர் எஸ்.பி. சாமி அவர்களின் முதலாவது நினைவு தினம் இன்று. ஏதோ சில வாரங்களுக்கு முன்னர்தான் அவரது இறுதிச்சடங்கிற்காக யாழ்ப்பாணம் சென்று திரும்பியதைப் போன்று ஒரு நினைவு. காலச்சக்கரம் மிகவும் விரைவாகவே சுழல்கிறது.

சாமி அவர்கள் தாபித்து வட பகுதி மக்களுக்கு பயன்தரத்தக்க முறையில் சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கும் யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் உள்ள நொதேர்ன் சென்றல் வைத்தியசாலை வளாகத்தில் அவரது சிலை இன்று திரைநீக்கம் செய்யப்படுகிறது. அதை முன்னிட்டு அவர் பற்றிய எனது மனப்பதிவுகளை ஒரு பத்திரிகையாளன் என்ற வகையில் பதிவு செய்கிறேன்.

செல்லையா பொன்னுச்சாமி என்பது அவரது முழுப் பெயர். ஆனால், எஸ்.பி. சாமி என்றுதான் நாடும் சமூகமும் அவரை அறிந்து வைத்திருக்கிறது. எனக்கும் அவருக்கும் இடையிலான ஊடாட்டத்துக்கும் தினக்குரலுக்கும் ஒரே வயது.

பத்திரிகையாளன் என்ற வகையில் எனது தொழில் வாழ்க்கைப் பயணத்தின் இடைநடுவில் சாமி அவர்களை சந்தித்த நாள் தொடக்கம் அவர் எனக்கு இன்னொரு தந்தை. எனக்கு மாத்திரமல்ல, என்னைப் போன்று தினக்குரலில் பணியாற்ற வந்த இளையவர்களுக்கு எல்லாம் அவர் தந்தை என்று கூறுவதே மிகப் பொருத்தம். நெருக்கடிகள் ஏற்பட்ட வேளைகளில் எல்லாம் அவர் நிலைகுலை யாமல் உறுதியுடன் நின்று, நாம் துவண்டுபோகாமல் வழிகாட்டிய பாங்கை இன்று நினைத்துப் பார்க்கிறேன்.

ஏற்கெனவே பல வருடங்கள் பத்திரிகைத்துறையில் பணியாற்றியவர்களைக் கொண்ட, ஒப்பீட்டளவில் இளவயதிரான பலரை உள்ளடக்கிய குழாம் ஒன்று அதன் எதிர்காலத்தை சாமி அவர்களிடம் ஒப்படைத்தவாறு தினக்குரலில் பணியாற்றத் தொடங்கியது. அவர்களில் சிலர் தங்களது எதிர்காலம் கேள்விக் குறியாகி விடுமோ என்று கவலை கொள்ள ஆரம்பித்த வேளைகளில் எல்லாம் அவர்களுக்கு தைரிய மூட்டுவதற்கு எமக்கு தெம்பைத் தந்தது சாமி அவர்களின் மனஉறுதிதான்.

ஒரு கட்டத்துக்கு பிறகு தலைநகரில் இருந்து மாத்திரமல்ல, யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருந்தும் தினக்குரலின் பிராந்தியப் பதிப்பு வெளியானது. குடாநாட்டை நாட்டின் ஏறைய பாகங்களுக்கும் வெளியுலகிற்கும் காட்டுவதற்கும் நாட்டின் ஏனைய பாகங்களையும் வெளியுலகையும் குடாநாட்டுக்கு காட்டுவதற்குமான ஒரு முயற்சியாக அமைந்த அந்த பிராந்தியப் பதிப்பு சாமி அவர்களின் விடாமுயற்சியினால் வெற்றி கண்டது.

குடாநாட்டில் இருந்து பத்திரிகைகள் ஏற்கெனவே வெளிவந்து கொண்டிருந்தன. ஆனால், தலைநகரில் இருந்து வெளியாகும் பத்திரிகை ஒன்று அதன் குடாநாட்டுப் பதிப்பை முதன் முதலாக வெளியிட்ட சாதனையை நிகழ்த்தியது தினக்குரலேயாகும்.

அந்த வெற்றியின் பின்னணியில் நிறுவனத்தின் பல்வேறு பிரிவுகளினதும் ஊழியர்களின் அர்ப்பணிப்புச் சிந்தையுடனான உழைப்பு இருந்தது என்ற போதிலும், அன்று இடர்பாடுகள் மிகுந்த குடாநாட்டுச் சூழ்நிலைகளுக்கு மத்தியில் சாமி அவர்கள் தந்த ஊக்கமே ஊழியர்களுக்கு நம்பிக்கையைக் கொடுத்தது. நிதி நெருக்கடிகளுக்கு மத்தியிலும், அவர் நிலைகுலையாமல் வெளிக்காட்டிய உறுதிப்பாடு எமக்கு எதிர்காலம் பற்றிய நம்பிக்கையை தந்தது.

சாமி அவர்களின் கல்விப் பின்புலம் வலுவானதாக இல்லாவிட்டாலும் கூட கற்றறிந்தவர்களுடனான அவரது சுலபமான ஊடாட்டம் எம்மை பிரமிக்கவைத்தது. சமூகத்தின் எந்த மட்டத்தவர்களுடனும் இலகுவாக பரிச்சயத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு வியக்கத்தக்க ஆளுமை அவரிடம் இருந்தது. சமூகத்தில் பல தரப்பினரதும் மதிப்புக்குரியவராக சாமி அவர்கள் விளங்கினார்.

ஆசிரிய பீடத்தின் சுயாதீனமான செயற்பாடுகளுக்கு அவர் ஒருபோதும் இடையூறாக இருந்ததில்லை என்பதை வெளிப்படையாகக் கூறவேண்டியது எனது கடமையாகும். எமது சுயாதீனமான செயற்பாட்டுக்கு அவர் மேலும் உறுதுணையாக இருந்தார் என்றே கூறவேண்டும்.

சாமி அவர்கள் வர்த்தகத் துறையுடன் தன்னை மட்டுப்படுத்திக் கொண்டவர் அல்ல. வடக்கிலும் தலைநகரிலும் சமூக, சமய அமைப்புக்கள் பலவற்றின் தலைவராகவும் அவர் நீண்டகாலம் பயனுறுதியுடைய பணியைச் செய்தார்.

வர்த்தகத்துறையின் பல்வேறு கிளைகளிலும் அவர் கால்பதித்த போதிலும், பிற்காலத்தில் கைவைத்த பத்திரிகைத் துறையே தொழிற்துறை அடையாளங்களில் அவருக்கு முக்கியமானதாக விளங்குகிறது.


மரணம் எவரையும் விட்டு வைக்கப் போவதில்லை. நாம் எல்லோரும் ஒருநாள் இறக்கத் தான் போகிறோம். ஆனால், வாழும் காலத்தில் நாம் செய்கின்ற பணிகளின் மூலமாக விட்டுச் செல்கின்ற மரபே முக்கியமானதாகும். சாமி அவர்கள் வர்த்தகத் துறையிலும் சமூக சேவையிலும் வளமான மரபை விட்டுச் சென்றிருக்கிறார். அது குறித்து அவரின் குடும்பத்தவர்களும் அவருடன் ஊடாடியவர்களும் என்றென்றைக்கும் பெருமைப்பட முடியும்.

சாமி அவர்களை நினைவு கூரும் இன்றைய தருணந்தில் அவரின் குடும்பத்தவர்களிடம் குறிப்பாக இளையமகன் கேசவராஜாவிடம் ஒரு அன்பான வேண்டுகோள்.

“உங்களது தந்தையார் வர்த்தக உலகில் பல்வேறு துறைகளிலும் தொழில் முனைவுகளைச் செய்தார் என்ற போதிலும், தினக்குரல் பத்திரிகையின் தாபகர் என்ற அடையாளமே அவருக்கு சமூகத்தில் பிரத்தியேகமான அந்தஸ்து ஒன்றைப் பெற்றுக் கொடுத்தது. என்னதான் சோதனைகள் வந்தாலும் அவற்றுக்கு உங்கள் தந்தையார் போன்று துணிச்சலுடன் முகங்கொடுத்து தினக்குரலை தமிழ் பேசும் மக்களின் கரங்களில் தொடர்ந்து தவழவிட வேண்டும். அதுவே உங்களது வாழ்வின் பித்தியேகமான மரபாக விளங்கும்.”

**- வீரகத்தி தனபாலசிங்கம்**

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். பழைய பிரச்னைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண்பீர்கள். உத்யோகத்தில் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். திடீர் திருப்பம் நிறைந்த நாள்.

**இடபம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலேயே தாழ்வுமனப்பான்மை தலைத்தூக்கும். உறவினர் முன்கோபத்தால் பகை உண்டாகும். உத்தியோகத்தில் அலைக்கழிக்கப்படுவீர்கள்.

**மிதுனம்**
மூத்த சகோதர வகையில் உதவிகள் உண்டு. விலை உயர்ந்த பொருட்கள் வாங்குவீர்கள். மனைவி வழியில் உறவினர்கள் மதிப்பார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிட்டும்.

**கடகம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். அலுவலகத்தில் ஊழியர்களை விட அதிகாரிகளிடம் செல்வாக்கு கூடும்.

**சிம்மம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். வேற்றுமதத்தவர்கள் நண்பர்கள் ஆவார்கள். புது ஒப்பந்தம் கையெழுத்தாகும். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். கனவு நனவாகும் நாள்.

**கன்னி**
எதிர்ப்புகள் அடங்கும். பழைய கடனில் ஒரு பகுதியை பைசல் செய்வீர்கள். பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டு. வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். நிம்மதி கிட்டும்.

**துலாம்**
குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். உறவினர்கள் வீடு தேடி வருவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். வெற்றிக்கு வித்திடும் நாள்.

**விருச்சிகம்**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் அதிகரிக்கும். எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். திடீர் லாபம் உண்டு. பணிகளை விரைந்து முடிப்பீர்கள். அதிரடி மாற்றம் உண்டாகும் நாள்.

**தனுசு**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் ஒரே நாளில் முக்கியமான நான்கைந்து வேலைகளை பார்க்க வேண்டி வரும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் தாமதமாகும். வேலைச்சுமை மிகுந்த நாள்.

**மகரம்**
விவாதங்களை தவிர்ப்பது நல்லது. குடும்பத்தைப் பற்றிய கவலைகள் வந்து நீங்கும் .திடீர் பயணங்கள் செலவுகளால் திணறுவீர்கள். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் வந்து செல்லும்.

**கும்பம்**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். உடன் பிறந்தவர்கள் பாச மழை பொழிவார்கள். வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். சிறப்பான நாள்.

**மீனம்**
உணர்ச்சி வசப்பட்டு பேசுவதை விட்டு அறிவுப்பூர்வமாகச் செயல்படுவீர்கள். திடீர் முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். அலுவலகத்தில் மரியாதை கூடும்.

# வீட்டை தீயிட்டு எரித்த கும்பல்! பூந்தோட்டம் பகுதியில் பதற்றம்

வவுனியா, மார்ச். 10
வவுனியா, பூந்தோட்டம் பாடசாலைக்கு முன்பாகவுள்ள வீட்டுக்குள் நேற்று முன்தினம் மாலை உள்நுழைந்த வன்முறைக் கும்பல், வீட்டில் இருந்தவர்கள் மீது தாக்குதலை மேற்கொண்டதுடன் வீட்டை பெற்றோல் ஊற்றி தீயிட்டு எரித்தது. இதனால், அந்தப் பகுதியில் பதற்றமான சூழல் ஏற்பட்டது.

இளைஞர்களுக்கிடையில் ஏற்பட்ட முரண்பாடு- அதன் தொடர்ச்சி கைக்கலப்பாக மாறியுள்ளது. இதனையடுத்து, அந்தப்பகுதிக்கு வெளி இடங்களில் இருந்து வன்முறைக் கும்பல் ஒன்று வாள்கள் மற்றும் பொல்லுகள் சகிதம் வருகை தந்துள்ளது.


அந்தக் கும்பல், தாக்குதலை மேற்கொள்ள முயன்ற போது, வீதியில் நின்ற இளைஞர்கள் வீட்டுக்குள் சென்று கதவை பூட்டினர்.

இதனையடுத்து, வீட்டுக்குள் நுழைந்த வன்முறைக்கும்பல் வீட்டின் யன்னல்களை உடைத்து சேதப்படுத்தியுள்ளது. கதவின் வழியாக பெற்றோல் ஊற்றி தீயிட்டு எரித்தனர். வீடெங்கும் தீபரவ முற்பட்ட நிலையில் கடும் போராட்டத்துக்கு மத்தியில் அது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. அதிஷ்டவசமாக வீட்டில் இருந்தவர்கள் சிறுகாயங்களுடன் உயிர் தப்பினர்.

வன்முறைக்குழு வீட்டை எரிக்கும் போது உள்ளே பெண்கள் மற்றும் சிறுவர்கள் இருந்துள்ளனர். குழந்தைகள் உள்ளதால் எரிக்க வேண்டாம் என்று அவர்கள் அவலக்குரல் எழுப்பிய போதும் வன்முறைக் கும்பல், அதனைப் பொருட்படுத்தாமல் கொழுத்திவிட்டு அங்கிருந்து தப்பிச்சென்றது.

இதேவேளை, குறித்த சம்பவத்தில் காயமடைந்த இருவர் வவுனியா பொது மருத்துவனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (எ-10)

# முன்னணியின் மகளிர் தின நிகழ்வு





யாழ்ப்பாணம், மார்ச். 10
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் சர்வதேச மகளிர் தின நிகழ்வு நல்லூர் சங்கிலியன் பூங்காவில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராசா கஜேந்திரன், யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் மேனகா சிவகரன், வல்வெட்டித்துறை நகர சபை முன்னாள் தவிசாளர் தவமலர் சுரேந்திரநாதன், தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன், சட்டத்தரணிகளான ந. காண்டீபன், க. சுகாஸ் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

மேலும், இதன்போது மகளிர் அமைப்புகளால் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன.

மேலும், பல்வேறு கலை நிகழ்வுகளும் விழிப்புணர்வு மேடை நாடகமும் நடைபெற்றன. (எ-03)

## லலித் - குகன் கடத்தல் வழக்கு: கோட்டாவுக்கு ஏப்ரலில் கட்டளை

யாழ்ப்பாணம், மார்ச். 10
யாழ்ப்பாணத்தில் காணாமல் ஆக்கப்பட்ட லலித் மற்றும் குகன் ஆகியோர் தொடர்பான ஆட்கொணர்வு மனு வழக்கில், முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவின் சாட்சியத்தை எவ்விதம் பதிவு செய்வது என்பது குறித்த நீதிமன்றக் கட்டளை எதிர்வரும் ஏப்ரல் 28 ஆம் திகதி வழங்கப்படவுள்ளது.

2011 ஆம் ஆண்டு டிசெம்பர் 10 ஆம் திகதி சர்வதேச மனித உரிமைகள் தினப் போராட்டத்தை ஒருங்கிணைக்க முயன்றபோது லலித்குமார் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் ஆகியோர் யாழ்ப்பாணத்தில் வைத்து காணாமல் ஆக்கப்பட்டனர். இது தொடர்பில் அவர்களது உறவினர்களால் தாக்கல் செய்யப்பட்ட ஆட்கொணர்வு மனு மீதான விசாரணைகள் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நீண்டகாலமாக நடைபெற்று வருகின்றன.

சம்பவம் தொடர்பில் இரு தரப்பினரும் தமது எழுத்துமூல சமர்ப்பணங்களைத் தாக்கல் செய்துள்ள நிலையில், கோட்டாபய ராஜபக்ஷவின் சாட்சியத்தைப் பெறுவது தொடர்பான இறுதி நடைமுறைக் கட்டளை ஏப்ரல் 28 ஆம் திகதி வழங்கப்படும் என்று நீதிமன்றம் அறிவித்துள்ளது. (எ)

## குமாரசாமிப்புலவர் குருபூஜை விழா

யாழ்ப்பாணம், மார்ச். 10
சைவ வாழ்வியலில் திருவிளையாடல் புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவசிறீ பாலா. திருகுணானந்தக் குருக்கள் நடத்தும் வாராந்தத் திருவிளையாடல் புராணச் சிறப்புச் சொற்பொழிவும், மாதந்தோறும் "ஈழத்து சமயப் பெரியார்கள்" குருபூஜை விழா தொடர் 10 குமாரசாமிப்புலவர் குருபூஜை விழா தெல்லிப்பழை-மாவைகலட்டி அருள்மிகு நாகதம்பிரான் தேவஸ்தானத்தில் எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணிக்கு சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைபில் நடைபெறவுள்ளது. இந்த விழாவில் ஆன்மீக விருந்தினராக ஓய்வுநிலை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பா. தனபாலன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். குமாரசாமிப்புலவர் குருபூஜை நிகழ்வை தொடர்ந்து சிறப்புச்சொற்பொழிவை இளஞ்சைவப்புலவர் க. கயிலைவாசன் "குமாரசாமிப் புலவரின் சமயப்பணி" என்னும் விடயப்பொருளில் நிகழ்த்துவார்.

சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படும். மாணவர்களின் கலைநிகழ்வும், ஆன்மீக விருந்தினர் உரையைத் தொடர்ந்து குருபூஜையை முன்னிட்டு மாணவர்களிடம் நடத்தப்பட்ட வினாடி வினாப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (எ)

## மெய்வல்லுநர் போட்டி இன்று

யாழ்ப்பாணம், மார்ச். 10
மட்டுவில் தெற்கு அ. மி. த. க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 01. 30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலையின் அதிபர் கனகரத்தினம் மகிந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக தென்மராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சுப்பிரமணியம் சிறிகுமரனும், சிறப்பு விருந்தினராக பழைய மாணவி சட்டத்தரணி திருமதி. தர்ஷிகா திலீபனும், கௌரவ விருந்தினர்களாக சாவகச்சேரி ச.தொ.ச. முகாமையாளர் ப. சுதர்சன், நுணாவில் மேற்கு கிராம உத்தியோகத்தர் ப. பிரதீபன் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்று மாதங்களில் 3600 வீதி விபத்துகள்

## 422 பேர் உயிரிழப்பு

கொழும்பு, மார்ச். 10

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 3,600இற்கும் அதிகமான வீதி விபத்துகள் பதிவாகியுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள தகவல்களின் படி, ஜனவரி முதலாம் திகதி முதல் மார்ச் 2ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் மாத்திரம் 3,642 விபத்துகள் பதிவாகியுள்ளன.

405 உயிரிழப்பு நேரிட்ட விபத்துகள் பதிவான நிலையில் அவற்றில் 422 பேர் உயிரிழந்தனர்.

அத்துடன் 866 பாரதூரமான விபத்துகள் பதிவான நிலையில் அவற்றில் 1,730 பேர் காயமடைந்துள்ளனர்.

இது தவிர 641 விபத்துகளில் சொத்துகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# நிலக்கரி விநியோகத்தடையால் மின்வெட்டு ஏற்படும் அபாயம்

## முன்னிலை சோசலிச கட்சி எச்சரிக்கை

கொழும்பு, மார்ச். 10

நாட்டில் கடந்த பத்து நாட்களாக நிலக்கரி ஏற்றிய கப்பல்கள் எதுவும் வருகை தராத காரணத்தால் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் முதல் பாரிய மின்சார நெருக்கடி ஏற்படும் அபாயம் உள்ளது என்று முன்னிலை சோசலிச கட்சியின் செயலாளர் புபுது ஜயகொட தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

இந்த ஆண்டில் மின்சார உற்பத்திக்காக 25 நிலக்கரி கப்பல்களை விநியோகிக்கும் ஒப்பந்தத்தை பெற்றுக்கொண்ட "ட்ரைடென்ட் கெம்பர்" எனும் இந்திய நிறுவனமானது இதுவரை 13 கப்பல்களை மாத்திரமே இலங்கைக்கு கொண்டு வந்துள்ளது. ஏப்ரல் மாத இறுதிக்குள் 25 நிலக்கரி கப்பல்களையும் தரையிறக்க வேண்டிய கட்டாயம் உள்ள போதிலும் மார்ச் மாதத்தின் முதல் வாரத்தில் ஒரு கப்பல் கூட நாட்டை வந்தடையவில்லை என்பது பாரிய சந்தேகங்களை தோற்றுவிக்கிறது.- என்றார். (எ)

# மசகு எண்ணெய் விலை அதிகரிப்பு

கொழும்பு, மார்ச். 10

மத்திய கிழக்கில் அதிகரித்து வரும் போர் பதற்ற நிலை காரணமாக சந்தையிலிருந்து தினமும் 20 மில்லியன் பீப்பாய்களின் மசகு எண்ணெய் விநியோகம் தடைப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டுக்குப் பிறகு முதன்முறையாக உலகளாவிய ரீதியிலான மசகு எண்ணெய் ஒரு பீப்பாயின் விலை 100 அமெரிக்க டொலர்களாக பதிவாகியுள்ளது.

சர்வதேச சந்தை அளவீடான பிரெண்ட் மசகு எண்ணெய் விலை, ஆசிய பசிபிக் சந்தைகளில் புதிய வார வர்த்தகம் தொடங்கியதும் 12. 2 சதவீதம் உயர்ந்து ஒரு பீப்பாயின் விலை 104. 05 அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளது. (எ)

# குஷ் போதைப்பொருளுடன் இந்திய பிரஜை ஒருவர் கைது

கொழும்பு, மார்ச். 10

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் வருகை முனையத்தில் குஷ் போதைப் பொருளுடன் சந்தேகநபர் ஒருவர் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் விமான நிலையப் பிரிவு உத்தியோகத்தர்களால் முன்னெடுக்கப்பட்ட சோதனையின் போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதானவர் 27 வயது இந்தியப் பிரஜை என்று தெரியவந்துள்ளது.

இவரிடமிருந்து 2 கிலோ 762 கிராம் குஷ் போதைப்பொருள் மீட்கப்பட்டது. (எ)

# விவசாய கிணற்றில் விழுந்து 10 வயது சிறுவன் உயிரிழப்பு

குருநாகல், மார்ச். 10

குருநாகல் - பொல்பித்திகம பகுதியில், விவசாய கிணற்றில் விழுந்து சிறுவன் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் செம்புகுலிய, கெக்கிராவ பகுதியை சேர்ந்த 10 வயது சிறுவன் என அடையாளம் காணப்பட்டார்.

குறித்த சிறுவன் விளையாடிக்கொண்டிருந்த போது, வீட்டின் பின்புறம் இருந்த விவசாயக் கிணற்றில் தவறி விழுந்ததில் இந்த விபத்து நேர்ந்தது. (எ)

# இலங்கை அருகே தாக்குதல்: 104 பேர் பலி! 32 பேர் காயம்

## ஈரான் இராணுவம் அறிவிப்பு

தெஹ்ரான், மார்ச். 10

ஈரான் போர்க் கப்பல் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 104 பேர் உயிரிழந்தனர். 32 பேர் காயமடைந்தனர் என்று ஈரான் இராணுவம் அறிவித்துள்ளது.

அமெரிக்கா நடத்திய தாக்குதல் காரணமாக, இலங்கை கடற்பரப்புக்கு அப்பால் இந்தக் கப்பல் விபத்துக்குள்ளானது.

கடந்த 4ஆம் திகதி காலி துறைமுகத்திலிருந்து சுமார் 40 கடல் மைல் தொலைவில் இந்த கப்பல் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

கப்பலில் இருந்த 35 பேரை இலங்கை கடற்படையின் மீட்புக் குழுவினர் மீட்டு கரைக்கு கொண்டு வந்தனர்.

இவர்கள் சிகிச்சைக்காக காலி - கராப்பிட்டிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

இவர்களில் 10 பேர் இன்னும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அதில், 8 பேர் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (எ)

# இந்தியாவிடமும் அமெரிக்காவிடமும் நாட்டின் கௌரவம் அடகு வைப்பு

## ஐக்கிய மக்கள் சக்தி விசனம்



கொழும்பு, மார்ச். 10

எதிர்க்கட்சியில் இருந்தபோது அமெரிக்கா மற்றும் இந்தியாவுக்கு எதிராக கூச்சலிட்டவர்கள், இன்று அந்த நாடுகளுக்கு பயந்து ஒவ்வொரு தீர்மானங்களையும் எடுக்கின்றனர். நாட்டின் கௌரவத்தை இந்தியாவிடமும் அமெரிக்காவிடமும் அடகு வைத்துள்ளனர் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி குற்றம்சாட்டினார்.


கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சியில் இருந்தபோது அப்போதைய அமைச்சர்களை கேலி செய்த ஜே. வி. பி. அணியினர், இன்று ஆட்சியில் அமர்ந்ததும் சர்வதேச ரீதியில் நாட்டை ஒரு நகைச்சுவை பொருளாக மாற்றியுள்ளனர். அமைச்சருக்கு ஆங்கிலத்தில் உரையாற்றத் தெரியாவிட்டால், சிங்களத்தில் பேசி ஒரு மொழி பெயர்ப்பாளரை பயன்படுத்தியிருக்கலாம். அது நாட்டின் கௌரவத்தை பாதுகாத்திருக்கும். ஆனால், தெரியாத மொழியில் பேசி சர்வதேச அரங்கில் இலங்கையை தாழ்த்தியிருக்கின்றார் என்றும் சமிந்த விஜேசிறி கூறினார்.

எச்சரிக்கை!
உங்கள் வீட்டில் சட்டவிரோத இந்தியன் DTH (DishTV) இருக்கிறதா?
SUN DIRECT TATA sky dishtv VIDEOCON d2h Digital DTH Service
இவற்றை விற்பனை செய்வதும், பயன்படுத்துவதும் இரண்டுமே சட்டவிரோதம்!
அவசியமற்ற சட்டப்பிரச்சனைகளை தவிர்க்க, இன்று எமது சட்டபூர்வ கேபிள் டிவி இணைப்பை பெற்றுக்கொள்ளுங்கள்!
It has come to our notice that illegal DTH (Dish TV) service providers are advertising unverified services through social media platforms. While we have initiated measures to stop such illegal operations, TRC would like to notify all consumers to be cautioned of obtaining services from such illegal vendors or making any type of payments. You may refer http://www.trc.gov.lk/direct-to-home-satellite-broadcasting-operators.html for information on authorized DTH operators before subscribing for such services.
Telecommunications Regulatory Commission of Sri Lanka
155 செனல்கள் 1420/- ரூபா (அனைத்துவரிகளும் சேர்த்து)
புதிய இணைப்புக்கு 10,000/- ரூபா மட்டுமே!
தொடர்புக்கு 0707 888 999 நிபந்தனைக்கு உட்பட்டது.
Ask CABLE VISION
உங்கள் நம்பிக்கைக்குரிய கேபிள் டிவி சேவை!
நம்பகமான சேவை | தெளிவான படம் மற்றும் ஒலி | சட்டபூர்வ பாதுகாப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விற்பனைக்காக வீட்டில் பெருமளவு பெற்றோல் பதுக்கிய பெண் கைது!



கல்முனை, மார்ச். 10

வீடொன்றில் சூட்சுமமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த பெருமளவு பெற்றோலை கல்முனை தலைமையக பொலிஸார் பறிமுதல் செய்தனர்.

அம்பாறை- கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புறநகர் பகுதியில் கடை ஒன்றுடன் இணைந்த வீடொன்றில் பெற்றோல் உள்ளிட்ட எரிபொருள் பதுக்கி வைக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வந்தது. இந்த நிலையில், நேற்று முன்தினம் மாலை கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லசந்த களுஆராச்சிக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய ஊழல் ஒழிப்பு பிரிவு உப பொலிஸ் பரிசோதகர் எம். முஸ்தபா தலைமையிலான பொலிஸார் கைது நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போது, குறித்த வீட்டின் கட்டிலின் கீழ் சூட்சுமமாக போத்தல் மற்றும் கலன்களில் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் 32 லீற்றர் பெற்றோல் உள்ளிட்ட எரிபொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

அத்துடன் பெண் ஒருவர் கைதான நிலையில் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

(எ-01)

# வெற்றிலை மென்றவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

மட்டக்களப்பு, மார்ச். 10

மட்டக்களப்பில் வெற்றிலை மென்றவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபைக்குட்பட்ட அனைத்து வெதுப்பக உரிமையாளர்களுடனான விசேட கலந்துரையாடல் கடந்த மாதம் நடைபெற்றது. இதன்போது, பொதுச் சுகாதார பரிசோதகர்களின் ஆலோசனைக்கமைய, சுகாதார விதிமுறைகளை பின்பற்றியே வியாபாரம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தவிசாளர் மே. வினோராஜினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

இந்த நிலையில், வெற்றிலை மென்றபடி வெதுப்பக பொருட்களை விற்பனை செய்யும் வாகனத்தை செலுத்தி சென்றவருக்கு எதிராக, பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் ஊடாக தற்போது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. குறித்த வாகனத்தின் சாரதியிடம் மருத்துவச் சான்றிதழ் இல்லாமையும் தெரியவந்துள்ளது.

அத்தோடு, சினிமா பாடல்களை அதிக சத்தத்துடன் ஒலிக்கச் செய்து செல்வதால் பொது மக்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படுகின்றன. இதன் காரணமாக வெதுப்பக வண்டிகளுக்கென்று பிரத்தியேகமான ஒலி வழங்கப்பட்டிருந்தது. எனினும், அதனை மீறிச் செயல்பட்டமைக்காகவும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் ஊடாக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

"இவ்வாறான விதிமுறை மீறல்களில் ஈடுபடுபவர்கள் யாராக இருப்பினும், அவர்களுக்கு எதிராக பாரபட்சமின்றி சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்" - என்று தவிசாளர் வினோராஜ் தெரிவித்தார்.

(எ)

# இரு வேறு விபத்துகளில் இரு இளைஞர்கள் பலி!

கல்முனை, மார்ச். 10

நாட்டின் இருவேறு பகுதிகளில் இடம்பெற்ற வாகன விபத்துகளில் இருவர் உயிரிழந்தனர்.

அம்பாறை - அக்கரைப்பற்று, கல்முனை பிரதான வீதியின் அட்டாளைச்சேனை பகுதியில், இடம்பெற்ற விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் காலை இந்தச் சம்பவம் பதிவானது.

கல்முனை நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று, முன்னால் சென்ற ஓட்டோவை முந்திச்செல்ல முயன்றபோது, கட்டுப்பாட்டை இழந்து அருகில் இருந்த மின் கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் காயமடைந்த மோட்டார் சைக்கிள் ஓட்டுநரும், பின்னால் பயணித்தவரும் அக்கரைப்பற்று மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டபோது, ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

அட்டாளைச்சேனை பகுதியைச் சேர்ந்த 20 வயது இளைஞனே இவ்வாறு உயிரிழந்தார்.

இதேவேளை, மின்னேரியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹபரணை - மட்டக்களப்பு வீதியின் ரஜஎல பகுதியில், மோட்டார் சைக்கிள் பஸ்ஸில் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்தார்.

ஞாயிற்றுக்கிழமை இரவு இந்த விபத்து இடம்பெற்றது.

உயிரிழந்தவர் அட்டாளைச்சேனை பகுதியை சேர்ந்த 20 வயதுடையவர் என தெரியவந்துள்ளது.

(எ)

# வனப்பகுதியில் தீ

ஹற்றன், மார்ச். 10

ஹற்றன் - டிக்கோயா பிரதான வீதியில் உள்ள அளுத்கம பகுதியில் உள்ள ஒரு காட்டுப் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை இரவு பெரும் தீ விபத்து ஏற்பட்டது. தீ தற்போது பிரதான வீதியை எட்டியுள்ளது, மேலும், அளுத்கம மக்கள் அதைக் கட்டுப்படுத்த கடும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இப்பகுதியில் நிலவும் கடுமையான வறண்ட வானிலை காரணமாக தீ வேகமாக பரவி வருகிறது. மேலும் தீ விபத்துக்கான காரணம் இன்னும் வெளியிடப்படவில்லை.

இருப்பினும், இந்த வனப்பகுதிக்கு யாரோ ஒரு குழு தீ வைத்திருக்கலாம் என்று அப்பகுதி மக்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (எ)

# "எம்மை வாழ விடுங்கள்" மகளிர் தினத்தில் போராட்டம்

லிந்துலை, மார்ச். 10

சர்வதேச மகளிர் தினம் நேற்று முன்தினம் உலகம் முழுவதும் கொண்டாடப்பட்டது. இந்த நிலையில், லிந்துலை - அக்கரகந்த பகுதியில் உள்ள நூற்றுக்கணக்கான பெண்கள் தமது குடும்பங்களை காக்க வீதியில் இறங்கிப் போராடிய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அக்கரகந்த பகுதியில் கடந்த ஐந்து தசாப்தங்களாக (50 ஆண்டுகள்) இயங்கி வரும் மதுபான சாலையால் தமது வாழ்வு சீரழிந்து போவதாக அப்பகுதி மக்கள் வேதனை வெளியிட்டுள்ளனர். மகளிர் தினத்தன்று காலை ஒன்று திரண்ட 100இற்கும் மேற்பட்ட பெண்களும், ஆண்களும் கைகளில் பதாகைகளை ஏந்தி தமது பலத்த எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இந்த மதுபானசாலை அமைந்துள்ள பகுதியில் சுமார் 5,000 குடும்பங்கள் வசித்து வருகின்றன. இந்த ஒரு மதுபானசாலையால் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் சீரழிகின்றனர். குடும்பங்களில் அமைதி என்பதே இல்லாமல் போய்விட்டது என போராட்டக்காரர்கள் கண்ணீர் மல்க தெரிவித்தனர். (எ)

# கட்டாக்காலி மாடுகளின் தொல்லை அதிகரிப்பு

மட்டக்களப்பு, மார்ச். 10

மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை பற்று பிரதேசத்துக்குட்பட்ட ட ஆரையம்பதியின் பல பகுதிகளிலும், பிரதான வீதிகளிலும், கட்டாக்காலி மாடுகளின் நடமாட்டத்தால், வியாபாரிகள், வாகன சாரதிகள், பாதசாரிகள், பாடசாலை மாணவர்கள், முதியவர்கள் என பலரும் மிகுந்த சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மாடுகளை வளர்ப்போர் மேய்ச்சலுக்கு விடும்போது, மக்கள் பயன்படுத்தும் பாதைகளிலும் குறிப்பாக பிரதான வீதிகளில் விடுவதனால் வீதி விபத்துகள் அதிகரித்து வருகின்றன.

வாகனங்கள் பயணிக்கும் போது, திடீரென குறுக்கீடு செய்வதனாலும், பாய்வதனாலும், விபத்துக்குள்ளாகி பலர் படுகாயமடைந்துள்ளனர். கட்டாக்காலி மாடுகளின் தொல்லை குறித்து பிரதேச சபை உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர். (எ)

# "அனைவருக்கும் காணி உரிமை நிச்சயம் வழங்கப்பட வேண்டும்"

நுவரெலியா, மார்ச். 10

மலையகத்தில் எமது பரம்பரைகளை உருவாக்கிய மலையக பெருந்தோட்ட மக்கள் அனைவருக்கும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் ஊடாக காணி உரிமை நிச்சயம் வழங்கப்பட வேண்டும் என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

நுவரெலியா- கொட்டகலையில் நடைபெற்ற மலையக வாழ்வுரிமை மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)

# உழவியந்திர சாரதி சடலமாக மீட்பு

காரைதீவு, மார்ச். 10

அம்பாறை மாவட்டம், காரைதீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாவடிப்பள்ளி வளைந்த வட்டைப் பகுதியில், அறுவடை இயந்திரத்தை ஏற்றிச் சென்ற உழவியந்திரத்தின் சாரதி சடலமாக மீட்கப்பட்டார்.

சடலமாக மீட்கப்பட்டவர் அம்பாறை, நவகம்புர - உதயபுர பகுதியைச் சேர்ந்த 39 வயது சதுரங்க குமார என அடையாளம் காணப்பட்டார்.

அறுவடை இயந்திரத்தை உழவியந்திரத்தில் ஏற்றிச் சென்றுகொண்டிருந்த போது இவர் உயிரிழந்தார்.

சடலமாக மீட்கப்பட்டவரின் முகப்பகுதி சிறிது சிதைந்த நிலையில் காணப்படுவதாக பொலிஸார் கூறினர். (எ)

# வீட்டு தளபாட உற்பத்தி நிலையத்தில் தீ விபத்து

கண்டி, மார்ச். 10

அக்குறணையில் வீட்டுத் தளபாட உற்பத்தி நிலையம் ஒன்று நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை வேளை தீப்பற்றி முற்றாக நாசமானது.

அக்குறணை 7ஆம் மைல்கள் பிரதேசத்திலுள்ள மேற்படி தளபாட நிறுவனமானது உற்பத்தி நிலையம், காட்சியறை, களஞ்சியம் ஆகிய மூன்று பகுதிகளை கொண்டிருந்தது.

அவை அனைத்தும் முற்றாக சேதமடைந்த காரணத்தால் பல கோடி ரூபாய்கள் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

தீ ஏற்படக் காரணம் என்னவென்று இன்னும் கண்டறியப்படவில்லை.

(எ)

# மீன் விற்பனை போர்வையில் ஹெரோயின் விற்றவர்கள் கைது

கல்முனை, மார்ச். 10

மீன் விற்பனை போர்வையில் ஹெரோயின் போதைப்பொருளை விற்பனை செய்து வந்த இரு சந்தேக நபர்களை கல்முனை தலைமையக பொலிஸார் கைது செய்தனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கடற்கரை வீதியில் நேற்று முன்தினம் மாலை இந்தக் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

சந்தேக நபர்கள் வசமிருந்து 40 மற்றும் 50 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது. (எ-01)

# வாகரையில் மகளிர் தின நிகழ்வு



மட்டக்களப்பு, மார்ச். 10

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு, வாகரை காரமுனைப் பகுதியில் மகளிர் தின நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சஜின் வாஸ்...

சொத்துக்கள் ஈட்டியது தொடர்பான விசாரணைக்காக வாக்குமூலம் ஒன்றை வழங்குவதற்காக, நேற்று முற்பகல் அவர் இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவுக்கு சென்றிருந்தார்.

வாக்குமூலம் வழங்க வந்திருந்த வேளையிலேயே, விசாரணைகளை முன்னெடுத்த அதிகாரிகள் அவரை கைது செய்துள்ளனர்.

சுமார் 243.8 மில்லியன் ரூபா பெறுமதியான சொத்துக்களை சட்டவிரோதமான முறையில் ஈட்டியதாக அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (அ)

## ஈரானிய...

போர்க்கப்பல் அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பலால் ஏவப்பட்ட டொர்பிடோ தாக்குதலில் மூழ்கடிக்கப்பட்டுள்ளது.

தாக்குதலுக்கு உள்ளான கப்பலில் பலியான மாலுமி ஒருவர், தாக்குதலுக்குச் சற்று நேரத்திற்கு முன்னர் தனது தந்தையுடன் தொலைபேசியில் உரையாடியுள்ளமை தொடர்பில் "ஈரான் இன்டர்நேஷனல்" செய்தி வெளியிட்டுள்ளது.

அதன்படி, அமெரிக்கப் படைகள் கப்பலை விட்டு வெளியேறுமாறு இரண்டு முறை எச்சரிக்கை விடுத்த போதிலும், கப்பலின் கட்டளை அதிகாரி மாலுமிகளை வெளியேற அனுமதிக்கவில்லை என அந்த மாலுமி தனது தந்தையிடம் தெரிவித்துள்ளார்.

இதனால் கப்பலின் கட்டளை அதிகாரிக்கும் மாலுமிகளுக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளதாக குறித்த மாலுமி தனது தந்தைக்கு அறிவித்துள்ளார்.

இந்தத் தாக்குதலில் கப்பலில் இருந்த பல மாலுமிகள் கொல்லப்பட்டனர். உயிர்காப்புகள் மூலம் தப்பித்த 32 மாலுமிகள் மாத்திரமே உயிர் பிழைத்துள்ளனர். இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு அமெரிக்கா ஒரு எதிரி நாட்டின் போர்க்கப்பலை நீர்மூழ்கிக் குண்டு மூலம் மூழ்கடிப்பது இதுவே முதல் முறையாகும்.

இதற்கிடையில், "ஜரிஸ் டேனா" கப்பலில் இருந்து தப்பிய 32 மாலுமிகளும், இலங்கையினால் மீட்கப்பட்ட மற்றுமொரு ஈரானியக் கப்பலான "ஜரிஸ் புச்சர" இலிருந்து மீட்கப்பட்ட 208 மாலுமிகளும் இலங்கையில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். (அ)

## அத்தியாவசிய...

மதிப்பு குறைப்பு காரணமாக உள்ளூர் சந்தையில் விலைகள் ஏற்கனவே 5-10 சதவீதம் அதிகரித்துள்ளதாக அத்தியாவசிய உணவுப் பொருட்களின் இறக்குமதியாளர்கள் மற்றும் வர்த்தகர்கள் சங்கத்தின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

"இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை அனுமதிப்பதற்காக கடந்த வியாழக்கிழமை ஒரு அமெரிக்க டொலருக்கு ரூ. 311 செலுத்தினோம். கடந்த வெள்ளிக்கிழமை ரூ.312 செலுத்தினோம்.இந்த வாரம் இது மேலும் அதிகரிக்கக்கூடும். கூடுதலாக, வளைகுடாவில் மோதல்கள் விரிவடைவதால் அதிக சரக்கு கட்டணங்களை நாங்கள் ஏற்க வேண்டும்," என்று அவர் கூறினார்.

இலங்கை சீனி, பருப்பு, வெங்காயம், ரின் மீன் மற்றும் மசாலாப் பொருட்கள் போன்ற பெரும்பாலான அத்தியாவசிய உணவுப் பொருட்களை இறக்குமதி செய்கிறது.

இந்த இறக்குமதிகள் முக்கியமாக இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், கனடா மற்றும் அவுஸ்திரேலியா போன்ற நாடுகளிலிருந்து பெறப்படுகின்றன.

எதிர்வரும் பண்டிகைக் காலத்தை முன்னிட்டு உணவுத் தட்டுப்பாட்டைத் தவிர்க்க வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் வசந்த சமரசிங்க தலைமையில் உணவுப் பாதுகாப்பு குழு கடந்த வெள்ளிக்கிழமை கூடியது.

பயறு, உளுந்து மற்றும் தட்டைப்பயறு உள்ளிட்ட ஆறு வகையான தானியங்களின் உள்நாட்டு உற்பத்தி மற்றும் தேவை குறித்த அறிக்கையை அமைச்சர் கோரியுள்ளதாகவும் ஆங்கில நாளிதழொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (அ)

## மின்சாரசபை...

குறிப்பாக, 2024 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 18(ச) பிரிவின் கீழ், ஊழியர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் முறையான கூட்டு ஒப்பந்தம் ஒன்றில் கையொப்பமிடப்படவேண்டும் என தொழிற்சங்கங்கள் வலியுறுத்துகின்றன.

இந்த மறுசீரமைப்பு நடவடிக்கைகளின்போது ஊழியர்கள் தற்போது அனுபவித்து வரும் வேதன மற்றும் ஏனைய சலுகைகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படக்கூடாது என்பதுடன், அவை தொடர்பான சட்ட ரீதியான உறுதிப்பாடுகள் வழங்கப்படவேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ)

## சவால்களை...

ஒப்புக்கொண்ட ஆளுநர், தற்போதைய பொருளாதார நிலைமை அதனைச் சமாளிக்கக்கூடியதாக உள்ளதைச் சுட்டிக்காட்டினார்.

இலங்கையின் இலக்கு பணவீக்கம் 5 வீதமாக உள்ள நிலையில், கடந்த மாத பணவீக்கம் வெறும் 1.6 வீதமாக மட்டுமே பதிவாகியுள்ளது.

இந்த இடைவெளி, விலையேற்றத்தினால் ஏற்படும் அதிர்ச்சியைத் தாங்கிக்கொள்ள இலங்கைக்கு ஒரு சிறந்த தளத்தை வழங்கியுள்ளது.

முன்னைய நெருக்கடிக் காலத்தில் பணவீக்கம் 70 வீதமாக இருந்தது. அதனுடன் ஒப்பிடும்போது நாம் இப்போது மிகவும் தயார் நிலையில் இருக்கிறோம் என ஆளுநர் குறிப்பிட்டார்.

மத்திய கிழக்கு மோதல்கள் தீவிரமடைந்ததைத் தொடர்ந்து, ஒரு பீப்பாய் மசகு எண்ணெயின் விலை 90 டொலர்களைத் தாண்டியுள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை மட்டும் பிரெண்ட் மசகு எண்ணெய் விலை 9 வீதத்துக்கும் அதிகமாக உயர்ந்து, கடந்த இரண்டு ஆண்டுகளில் இல்லாத உச்சத்தை எட்டியுள்ளது.

பணவீக்கத்தை 5 வீத இலக்கை நோக்கி வழிநடத்தும் நோக்கில், இலங்கை மத்திய வங்கி அண்மையில் தனது கொள்கை வட்டி விகிதத்தை 7.75 வீத மட்டத்தில் பேணத் தீர்மானித்துள்ளது.

உலகளாவிய ரீதியில் பணவீக்க அழுத்தம் அதிகரித்து வரும் போதிலும், இலங்கையின் தற்போதைய பொருளாதாரக் குறிகாட்டிகள் நம்பிக்கையளிப்பதாக ஆளுநர் தெரிவித்தார்.

எனினும், இலங்கையைப் போன்ற சிறிய பொருளாதாரத்திற்கு உலகளாவிய விலை மாற்றங்கள் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதால், நிலைமையை உன்னிப்பாகக் கவனித்து வருவதாகவும் அவர் மேலும் கூறினார். (அ)

## இந்தியாவுக்கு...

மாதகல் கடல் வழியாக இந்தியாவுக்கு படகில் தங்கம் கடத்தி செல்லப்படுவதாக கடற்படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், குறித்த படகை கடலில் வழிமறித்து சோதனையிட்ட கடற்படையினர் 6 கிலோ 85 கிராம் தங்க கட்டிகளை மீட்டனர்.

அதனையடுத்து, படகில் இருந்து இருவர் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட இருவரையும் மீட்கப்பட்ட தங்கத்தையும், படகையும் கடற்படையினர், மேலதிக நடவடிக்கைக்காக காங்கேசன்துறை சுங்க அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளனர். (அ)

## சிறுவர்களுக்கு...

பொதுவான தோல் நோய்கள் ஏற்படக்கூடும். மென்மையான சருமம் கொண்ட சிறுவர்கள் மற்றும் வெளிப்புறச் சூழலில் அதிக நேரம் செலவிடும் சிறுவர்கள் இவ்வாறான பாதிப்புகளுக்கு அதிகமாக ஆளாகக்கூடும் என சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும், அதிக வெப்பநிலையினால் சிறுவர்களில் நீர்ச்சத்து இழப்பு அபாயம் அதிகரிப்பதுடன், தூக்கமின்மை, சோர்வு மற்றும் பசியின்மை போன்ற உடல் நலப் பிரச்சனைகளும் உருவாகக்கூடும்.

முறையான மேற்பார்வையின் கீழ் நீரில் விளையாடுவதன் மூலம் சிறுவர்களுக்கு குளிர்ச்சியளிக்க முடியும் எனவும், இது வெப்பமான வானிலையில் உடல் வெப்பத்தை குறைக்க உதவும் எனவும் சுகாதார வல்லுநர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்நிலையில், பல பாடசாலைகளில் ஆண்டுதோறும் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளினால் வெளிப்புற விளையாட்டுகளில் ஈடுபடும்போது வெப்பச் சோர்வு மற்றும் வெப்பப் பக்கவாதம் ஏற்படும் அபாயம் இருப்பதாகவும் சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

எனவே, சிறுவர்கள் போதுமான அளவு தண்ணீர் குடிப்பதை உறுதி செய்யவேண்டும். அத்தோடு, விளையாட்டு நடவடிக்கைகளின்போது இடைவேளைகளை எடுக்கவும், அதிக வெப்பநிலையில் நீண்ட நேரம் வெளியில் இருப்பதை தவிர்க்கவும் பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் விளையாட்டு ஏற்பாட்டாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ)

## நிலக்கரி...

சாட்டாகப் பயன்படுத்தி வருவதாகவும் ஐக்கிய மக்கள் சக்தி குற்றம் சுமத்தியுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமை அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷண ராஜகருண இதனைத் தெரிவித்தார்.

"மத்திய கிழக்கில் நிலவும் போர்ச் சூழலுக்கு முன்னரே அரசாங்கம் மின்சாரக் கட்டணத்தையும் எரிபொருள் விலையையும் உயர்த்த நடவடிக்கை எடுத்திருந்தது. தற்போது நிலக்கரி ஊழலில் ஏற்பட்டுள்ள நட்டத்தை மறைக்க, இந்த சர்வதேசப் போர் சூழலைப் பயன்படுத்தி, விலையேற்றத்தை நியாயப்படுத்த அரசாங்கம் முயற்சி செய்கிறது" என அவர் குறிப்பிட்டார்.

நிலக்கரி கொள்வனவில் இடம்பெற்ற முறைகேடுகளால் நாட்டுக்கு சுமார் 10 முதல் 15 பில்லியன் ரூபா வரை நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும், தரமற்ற நிலக்கரியைப் பயன்படுத்தியதால் பாரிய சுற்றுச்சூழல் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். இது குறித்து ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இதுவரை எந்தவொரு கருத்தையும் தெரிவிக்கவில்லை என அவர் குற்றம் சாட்டினார்.

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் வேலைவாய்ப்பு பெற்றுள்ள சுமார் 10 இலட்சம் இலங்கையர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை நாட்டுக்குத் தெளிவுபடுத்த வேண்டும். போரினால் வெளிநாட்டுப் பண அனுப்புகை குறைய வாய்ப்புள்ளதால், நாட்டின் பொருளாதாரம் மேலும் அபாய நிலைக்குத் தள்ளப்படும் என அவர் எச்சரித்தார்.

திருகோணமலை எண்ணெய் தாங்கிகளைப் பயன்படுத்துவதற்குத் திட்டமிட்ட போது, கடந்த காலத்தில் அதனை எதிர்த்த ஜே.வி.பி., இப்போது ஒன்றரை வருடங்கள் கடந்தும் அவற்றைச் சரிசெய்து பயன்படுத்துவதற்குத் தவறியுள்ளதாக அவர் விமர்சித்தார்.

இலங்கையின் பொருளாதாரம் மற்றும் எரிசக்தி விநியோகத்தைப் பாதுகாப்பதற்காகத் தற்போதைய அரசாங்கம் என்ன திட்டங்களை வகுத்துள்ளது என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும் என்றும், நிலக்கரி ஊழல் தொடர்பான முறைப்பாடுகள் மீது இதுவரையில் எவ்வித சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படாமை குறித்து அவர் கேள்வி எழுப்பினார்.

ஊழல் மற்றும் மோசடிகளில் ஈடுபட்டவர்கள் அனைவரும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார். (அ)

## காலநிலை...

என்பதை இலங்கையின் சமீபத்திய அனுபவம் எடுத்துக்காட்டுவதாக புதிய அறிக்கை வெளிப்படுத்தியுள்ளது.

சூறாவளியை ஒரு தனிமைப்படுத்தப்பட்ட வானிலை நிகழ்வாகப் பார்க்கக்கூடாது, மாறாக அதிகரித்து வரும் கடல் மேற்பரப்பு வெப்பநிலை மற்றும் பிராந்தியத்தில் மாறிவரும் வானிலை அமைப்புகளுடன் தொடர்புடைய காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பேரழிவுகளின் பரந்த வடிவத்தின் ஒரு பகுதியாகக் கருதப்பட வேண்டும் என்று அறிக்கை கூறுகிறது.

டித்வா சூறாவளி பலத்த காற்றுக்கு பதிலாக நீடித்த மற்றும் தீவிர மழைப்பொழிவு மூலம் பரவலான அழிவை ஏற்படுத்தியது.

மெதுவாக நகரும் குறைந்த அழுத்த அமைப்பு பல நாட்கள் நாடு முழுவதும் நீடித்தது, மாவட்டங்களை வெள்ளத்தில் மூழ்கடித்தது, உள்கட்டமைப்பை சீர்குலைத்தது மற்றும் மண்சரிவுகளைத் தூண்டியதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடலோரப் பகுதிகளை முக்கியமாக பாதிக்கும் வழக்கமான சூறாவளிகளைப் போலல்லாமல், டிட்வாவின் மிகக் கடுமையான தாக்கங்கள் உள்நாட்டில், குறிப்பாக இலங்கையின் மத்திய மலைப்பகுதிகளில் உணரப்பட்டதாக அறிக்கை குறிப்பிட்டது.

அமைப்பின் மெதுவான இயக்கம் பல நாட்களில் மண் செறிவூட்டலை ஏற்படுத்தியது, முன்னர் அதிக அபத்துள்ள மண்டலங்களாக அடையாளம் காணப்படாத இடங்களில் கூட, மண்சரிவு அபாயங்களை கணிசமாக அதிகரித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## நாயாற்றில்...

தொடர்ந்து, குறித்த வழக்கானது, ஆரம்பத்தில் வவுனியா மேல் நீதிமன்றிலும் பின்னர் கிளிநொச்சி மேல் நீதிமன்றிலும் இடம்பெற்ற நிலையில், சட்டமா அதிபர் திணைக்களத்தினால், கிளிநொச்சி மேல் நீதிமன்றத்தில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்த விசாரணைகள் நிறைவு பெற்று குறித்த வழக்கு, கிளிநொச்சி மேல் நீதிமன்ற நீதிபதி ஏ.ஜி.அலெக்ஸ்ராஜா முன்னிலையில் நேற்று தீர்ப்புக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது, குற்றவாளிக்கு பத்து வருட கடுழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதுடன், பாதிக்கப்பட்ட சிறுமிக்கு பத்து இலட்சம் ரூபா இழப்பீட்டை செலுத்துமாறும்,

தவறும் பட்சத்தில் இரண்டு வருட சாதாரன சிறைத் தண்டனையும், அத்துடன் பத்தாயிரம் ரூபா தண்டப் பணம் செலுத்துமாறும், தவறும் பட்சத்தில் மூன்று மாத கால சாதாரண சிறைத் தண்டனையும் அனுபவிக்க வேண்டும் எனவும் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# யாழ். நோக்கி படையெடுக்கும் தென்பகுதி கண் நோயாளர்கள்

### தரமான சிகிச்சை கிடைப்பதாக ஜனாதிபதிக்கு கடிதம்

கொழும்பு, மார்ச் 10

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் கண் நோயியல் பிரிவுக்கு, தென் பகுதிகளுக்கு வழங்கப்படும் வசதிகளை பெற்றுக் கொடுக்கவேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தென் பகுதியிலிருந்து, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு, கண்நோய் தொடர்பில் சிகிச்சைகளுக்கு செல்லும் நோயாளர்களால், ஜனாதிபதிக்கு இந்த விடயம் தொடர்பில் கோரிக்கை கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் கண் வெண்திரை நீக்கத்துக்கான மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக கூறி, அதற்கான சிகிச்சைகள் மேற்கொள்ளப்படுவதில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில், இதற்கான சத்திர சிகிச்சைகள் உரியமுறையில் முன்னெடுக்கப்படுவதாக ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

காலி, மாத்தறை, கண்டி, மாத்தளை உள்ளிட்ட பல பகுதிகளிலிருந்தும், யாழ்ப்பாணம் மருத்துவமனைக்கு, கண் சிகிச்சைகளுக்காக பெருமளவானோர் செல்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண் நோயியல் விசேட நிபுணர் எஸ்.மலரவன் தலைமையிலான மருத்துவர்கள், தாதியர்கள் உள்ளிட்ட மருத்துவமனை பணியாளர்கள், தங்களுக்கான சிகிச்சைகளை உரிய வாறு வழங்குவதாகவும், தென்பகுதி நோயாளர்கள் கூறியுள்ளனர்.

தென் பகுதியில் அதிக செலவில் கண் நோய் தொடர்பான சிகிச்சைகள் வழங்கப்படுகின்றபோதிலும், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் முற்றுமுழுதாக இலவச சேவைகள் வழங்கப்படுவதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த விடயங்களை கருத்திற் கொண்டு, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் கண் நோய் சிகிச்சைப் பிரிவுக்கு தேவையான மேலதிக வசதிகளை வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ)

## ஈரானிய மாலுமிகளின் சடலங்களால் வைத்தியசாலை நிர்வாகம் சிக்கலில்!

கொழும்பு, மார்ச் 10

அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பலால் தாக்கப்பட்ட ஈரானியப் போர்க்கப்பலில் உயிரிழந்த 87 மாலுமிகளின் உடல்களைக் கையாள்வதில் காலி கராப்பிட்டிய போதனா வைத்தியசாலை நிர்வாகம் பெரும் சவால்களை எதிர்கொண்டு வருவதாக தெரியவருகின்றது.

இந்த உடல்களை இன்னும் எவ்வளவு காலத்துக்கு வைத்தியசாலையில் வைத்திருக்கவேண்டும் என்பது குறித்துத் தமக்கு இதுவரை எவ்வித உத்தியோகபூர்வ தகவல்களும் வழங்கப்படவில்லை என வைத்தியசாலை பணிப்பாளர் மருத்துவர் எஸ்.டி.யு.எம். ரங்க தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சு, வெளிவிவகார அமைச்சு மற்றும் ஈரானிய தூதரகம் ஆகியவற்றுக்கு இடையே நடைபெற்று வரும் பேச்சுவார்த்தைகள் குறித்து தமக்குத் தெரியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஒரே நேரத்தில் அதிகளவிலான உடல்கள் கொண்டு வரப்பட்டபோது, அவற்றைப் பாதுகாப்பாக வைப்பதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டதாகப் பணிப்பாளர் சுட்டிக்காட்டினார்.

போதிய குளிரூட்டி வசதிகள் இல்லாத நிலையில், உடல்கள் சிதையாமல் இருக்க தற்காலிக ஏற்பாடுகள் மூலம் அவை பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

இந்த உடல்களை இலங்கையிலேயே அடக்கம் செய்ய அனுமதி வழங்கப்பட்டால், அதனை இலகுவாகச் செய்ய முடியும் என அவர் தெரிவித்துள்ளார். (அ)

## மத்திய கிழக்கு போர் காரணமாக தொழில் இழப்புக்கு வாய்ப்பில்லை

### வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்

கொழும்பு, மார்ச் 10

மத்திய கிழக்கு யுத்தச் சூழல் காரணமாக வெளிநாட்டில் பணி புரிபவர்களுக்கு தொழில் இழப்பு ஏற்படுவதற்கான வாய்ப்பு இல்லையென இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இருப்பினும், பணியாளர்கள் நாட்டை விட்டு செல்வதில் தாமதம் மட்டுமே ஏற்பட்டுள்ளதாகவும் பணியகம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, மேற்கு ஆசியாவின் யுத்தச்சூழல் காரணமாக தொழில் இழப்பு ஏற்படுமென உரிமம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் அமைப்பொன்று தெரிவித்துள்ளது.

80 வீதத்திலிருந்து 90 வீதம் வரை வருடாந்த வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேற்கு ஆசியாவிலேயே தங்கியுள்ளதென உரிமம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் அமைப்பின் செயலாளர் எம்.எவ்.எம்.அர்சாத் தெரிவித்தார்.

ஒவ்வொரு வருடமும் அதிகார ரீதியாக 3,00,000 பேர் வேலை பெற்று மேற்கு ஆசியா செல்கின்றனர். இவர்களில் 2,30,000 பேர் வேலையை இழக்கும் சூழல் ஏற்படும் என்றும், சிக்கலான எதிர்காலத்தை எதிர்நோக்க வேண்டியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (அ)

## மத்திய கிழக்கு பிராந்திய புதற்ற நிலையால் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை!

### பாதுகாப்பு பிரதி அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 10

"மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் நிலவும் பதற்றமான சூழலால் இலங்கையின் தேசிய பாதுகாப்புக்கு எவ்வித அச்சுறுத்தலும் ஏற்படவில்லை" என்று பாதுகாப்புப் பிரதி அமைச்சர் மேஜர் ஜெனரல் அருண ஜயசேகர தெரிவித்தார்.

ஈரானிய மாலுமிகள் மீதான தாக்குதல் மற்றும் அதனைத் தொடர்ந்து எழுந்துள்ள பாதுகாப்புச் சந்தேகங்கள் குறித்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை எப்போதும் ஐக்கிய நாடுகள் சபையின் உடன்படிக்கைகள் மற்றும் சர்வதேச சட்டங்களுக்கு உட்பட்டே செயற்படுகின்றது. தற்போதைய சூழலில் நாம் மனிதாபிமானத்துக்கே முதலிடம் வழங்கி வருகின்றோம். தேசிய பாதுகாப்புத் தொடர்பில் அரசு மிகுந்த பொறுப்புடன் செயற்பட்டு வருவதால், பொது மக்கள் இது குறித்து எவ்வித அச்சமும் கொள்ளத் தேவையில்லை.

அமெரிக்கத் தாக்குதலில் உயிரிழந்த ஈரானிய மாலுமிகளின் ஜனாஸாக்களை (உடல்களை) விரைவில் ஈரானுக்கு அனுப்பி வைப்பதற்கான இராஜதந்திர நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மனிதாபிமான அடிப்படையில் இந்தச் செயற்பாடுகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

மத்திய கிழக்கு விவகாரங்களில் இலங்கை நடுநிலையைப் பேணுவதோடு, தனது எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பாதுகாப்பை உறுதிப்படுத்தத் தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது- என்றார். (அ)

## மைத்திரியுடன் புகைப்படத்தில் இருந்த மகளைத் தேடிய தந்தையும் உயிரிழப்பு!



வவுனியா, மார்ச் 10

வவுனியாவில் காணாமற்போன தனது மகளைத் தேடிவந்த தந்தை ஒருவர் நேற்று மரணமடைந்தார்.

தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தலைவி ஜெயவனிதாவின் கணவனான பெரிய மடு நெடுங்கேணி பகுதியை சேர்ந்த காசிப்பிள்ளை (வயது-66) என்பவரே இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

இவரது மகளான கா.ஜெரோமி 2009 இல் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டிருந்ததார்.

அத்துடன் 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 7ஆம் திகதி ஜனாதிபதி தேர்தலின்போது முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் பிரசார துண்டுப்பிரசுரத்தில் தனது மகளின் புகைப்படம் ஜனாதிபதியுடன் வந்திருந்ததாக அவர்கள் தெரிவித்து வருவதுடன், காணாமற்போனோர் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவிலும் அது தொடர்பாக சாட்சியமளித்திருந்தனர்.

வவுனியாவில் கடந்த 3307 நாட்களாக முன்னெடுக்கப்பட்டுவரும் சுழற்சிமுறை உணவுத்தவிர்ப்பு போராட்டத்திலும் அவர் கலந்து கொண்டு தனது மகளை கண்டுபிடித்து தருமாறு போராடியிருந்தார்.

இந்நிலையில் மகளை காணாமலேயே அவர் மரணமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## கொழும்பு வைத்தியசாலையில் எம்.ஆர்.ஐ. இயந்திரம் செயலிழப்பு

### நோயாளர்கள் பெரும் அவதி

கொழும்பு, மார்ச் 10

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவிலுள்ள எம்.ஆர்.ஐ. ஸ்கான் இயந்திரம் செயலிழந்துள்ளது.

குறித்த ஸ்கான் இயந்திரம் கடந்த 3 ஆம் திகதி முதல் செயலிழந்துள்ளதாக வைத்தியசாலையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

விபத்துக்களில் காயமடைந்தவர்கள் மற்றும் நரம்பியல் அறுவைச் சிகிச்சைக்கு திட்டமிடப்பட்ட நோயாளர்களுக்காக பிரதானமாக ஒதுக்கப்பட்டிருந்த இந்த இயந்திரம் செயலிழந்துள்ளமையால் அவசர நோய் கண்டறியும் பரிசோதனைகள் செய்யவேண்டிய நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கியுள்ளனர்.

இந்த இயந்திரம் மூலம் நாள் ஒன்றுக்கு 25 இற்கும் மேற்பட்ட எம்.ஆர்.ஐ. பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. தற்போது இவை முழுமையாக நிறுத்தப்பட்டுள்ளன.

தேசிய வைத்தியசாலையில் மேலதிகமாக இரண்டு எம்.ஆர்.ஐ. இயந்திரங்கள் பயன்பாட்டில் உள்ளபோதிலும், இந்த இயந்திரத்தின் செயலிழப்பால் பாரிய நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன.

ஏற்கனவே பரிசோதனைகளுக்காக நேரத்தை ஒதுக்கியிருந்த நோயாளர்கள் இதனால் பரிசோதனைகளை மேற்கொள்ள முடியாமல் திருப்பி அனுப்பப்படுகின்றனர்.

தனியார் வைத்தியசாலைகளில் எம்.ஆர்.ஐ பரிசோதனை ஒன்றை மேற்கொள்வதற்கு 30,000 ரூபாய் முதல் 120,000 ரூபாய் வரை செலவிட வேண்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 10.03.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.